Registered as a News Paper பக்கங்கள் 4 விலை ரூபா: 5-00

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 28 [11 - 3 - 1993] வியாழக்கிழமை ஓசை 21

## சுகாதார பகுதி வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை இல்லை

யாழ். குடாநாட்டில் சுகாதார சேவையில் பாரிய வெற்றிடங்கள் இருப்பதாக தெரியவருகின்றது. அண்மைக் காலங்களில் இங்கு இருந்து ஓய்வு பெறும் மற்றும் இடமாற்றம் பெற்று செல்லும் அதிகாரிகளுக்கு ஏற்ப இங்கு மாகாண அரசாங்கத்தினால் அதிகாரிகளை நியமனம் செய்யாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. பொதுவாக ஆதாரவைத்தியசாலைகள், மாவட்டவைத்தியசாலை, சுற்று அயல் கூறுவைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலை, மத்திய மருந்தகம், மகபேற்று நிலையங்கள், போன்றவற்றிலே பற்றாக்குறை நிலவுகின்றது. பிரதேச வைத்திய அதிகாரிகள் 6 பேரும், வைத்திய அதிகாரி 32பேரும், பல்வைத்தியர்6, அப்போதிக்கரி 9, தாதிமார் 33, மருத்துவக்கல்வி 54, மருத் (4-ம் பக்கம் பார்க்க)

# புதிய தேசிய பாதுகாப்பு திட்டம்;

# கிழக்கைகட்டுப்படுத்தல்முதல்கட்டம்

## சிறிலங்கா ராணுவ வட்டாரங்களின் முடிவு

[கொழும்பு]

தேசிய மட்டத்திலான புதிய பாதுகாப்பு திட்டம் ஒன்றை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சில் உருவாக்கப்பட்டு வருவதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவிக்கின்றது. இதேவேளை, சிறிலங்கா பாதுகாப்பு படைகள் தமது கவனத்தை கிழக்கு நோக்கித் திருப்பியுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நிலை காரணமாக பாதுகாப்புப் படையினர் மத்தியில் இருந்து வந்த இழுபறி இப்போது ஒரு முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது ஈழப் போர் தொடங்கியது முதல் வடக்கில் தாக்குதலை ஒரு முனைப்படுத்துவதா அல்லது கிழக்கிலா என்பது பற்றிப் படை அதிகாரிகள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவியது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் படை அதிகாரிகள் தாம் விரும்பிய படி போரை நடத்தியதாக சண்டேரைம்ஸ் அரசியல் விமர்சகர் தெரிவிக்கிறார்.

இப்போது தேசிய மட்டத்திலான ஒரு பாதுகாப்புத் திட்டம் உருவாகி வருகிறதாம். எனினும் இதுபற்றி பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்க மறுத்து வருவதாக அரசியல் விமர்சகர் மேலும் தெரிவிக்கிறார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் தமது முழுக்கவனத்தை திருப்பும் பொருட்டு வடக்கில் தமது நடவடிக்கைகளை அவை குறைத்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கில் அரசின் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தும் முகமாக தரை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும் அதே சமயத்தில் வடக்கில் சிறிலங்கா விமானப்படை தொடர்ந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிடங்களை நிரப்பவே படைக்கு ஆட்சேர்ப்பாம்

(கொழும்பு)

அண்மையில் சிறிலங்கா இராணுவத்திற்கு புதிதாக நடைபெற்ற ஆட்சேர்ப்பு, இராணுவத்தின் பலத்தை மேலும் அதிகரிப்பதற்கு அல்ல படையில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பவே என கொழும்புப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்களில் சிறிலங்கா இராணுவமே அதிக ஆட்சேதத்தைக் கண்டிருந்தது. அத்துடன் இராணுவச் சிப்பாய்கள் பலர் போருக்கு அஞ்சி படையை விட்டு விலகியோடும் சம்பவங்களும் தற்போது அதிகரித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்காரணங்களினால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பவே அண்மையில் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றது. படைப் பலத்தை மேலும் அதிகரிப்பதற்காக அல்ல என மூத்த இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## எக்கல பகுதியில் தமிழ் இளைஞர் கைது

[கொழும்பு]

பொலீசார் தெரிவித்துள்ளன

## மீனவர் மீது தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு கல்முனைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி கடற்படைப் படகு திடீர் எறிகணை வீச்சுக்களை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் எறிகணை வீச்சுக்கள் குருநகர் கடலில் உள்ள முகத்துவாரக்கட்டை வரை வந்து கடலில் வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக மீனவர்கள் தமதுமீன்பிடி உபகரணங்களையும் படகுகளையும் கடலில் விட்டு கரைசேர்ந்துள்ளார்கள். இரவு 9.00 மணியில் இருந்து சுமார் ஒரு மணித்தியாலம் வரை இத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் நிலவின் ஒளியைப் பயன்படுத்தி கடற்படையினரின் படகுகள் மீனவர்களின் படகுகளை மிகவும் அண்மித்து வந்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (17)

## இனப்பிரச்சினை விடயத்தில்

# அரசின் போக்கு குறித்து மேற்கு நாடுகள் அதிருப்தி

[கொழும்பு]

கடந்த ஆண்டின் நடுப்பகுதி முதலே விடுதலைப்புலிகள்

யுள்ள அரசியல் அவதானிகள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் தமிழர்கள் சிலர்

தையில் ஈடுபட முயற்சித்த போதும் கூட அரசாங்கம் உரிய முறையில் கையாள

## குண்டு வீச்சுக்கு மத்தியில் மகளிர்தின விழா

(மன்னார்)

விமானக் குண்டு வீச்சின் மத்தியிலும் மன்னாரில் அனைத்துலக பெண்கள் தின நிகழ்வுகள் கடந்த திங்களன்று சிறப்புற நடைபெற்றுள்ளன.

மகளிர்தின எழுச்சிப் பேரணி பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலையிலிருந்து பாடசாலை மாணவியரின் பாண்ட் வாத்திய இசையுடன் கோஷங்களை எழுப்பியவாறு புறப்பட்டது. இந்த ஊர்வலத்தில் பெருமளவு மாணவ, மாணவிகள், பெண்கள், ஆண்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மாலை 6.30 மணியளவில் மடு விளையாட்டு மைதானத்தை ஊர்வலம் சென்றடைந்தது.

மன்னார் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தேன்மொழி தேசியக் கொடியை ஏற்ற மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. ஜான் மங்கள விளக்கு ஏற்றிவைத்தார்.

மகளிர் அமைப்பு சார்பில் சுதர்மினா, மாவட்ட அரசியல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் உள்ளோரை விடுவிக்கச் சம்மதம்

(வடமராட்சி)

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மிகுதித் தமிழ் இளைஞர்கள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர். இம் முகாமில் இன்னமும் இருபது இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விளைஞர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதி விடுதலை செய்யப்படுவர். இராணுவ உயர் அதிகாரிகள் இவர்களது விடுதலை சம்பந்தமாக சம்மதம் தெரிவித்திருப்பதாக தெரியவருகிறது. (யோ)

## கொழும்பு துப்பாக்கிச்சூட்டில் அரசியல் பின்னணி?

(கொழும்பு)

அண்மையில் கோதமி புரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த நிகால் சாந்திகுமார் அல்லது மாலுநிகால் என்பவர் கடந்த ஆண்டில் அத்த பத்திரிகையில் கேலிச் சித்திரக்காரர் ஜிப்றி யூனூஸ் மீது தாக்குதல் நடத்தியவரின் நெருங்கிய சகா என்று தெரியவந்துள்ளது.

கொழும்பில் சன நெரிசல் மிகுந்த பொரளைப் பகுதியில் அண்மையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மாலுநிகால் மற்றும் சிசிர குமார் ஆகியோர் கொல்லப்பட்டதும் மற்றும் நால்வர் காயமடைந்ததும் தெரிந்ததே. இத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்களை பொலீசார் இன்னமும் இனம் காணாதபோதும் இத்தகைய சம்பவங்களுக்கு பின்னணியில் அரசியல் தொடர்புகள் இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற மற்றுமொரு சம்பவம் மாளிகாவத்தைப் பகுதியில் நடைபெற்றதும் நான்கு பேர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இந்த இரு சம்பவங்களுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்றும் இவை தனித்தனியான சம்பவங்களே என்றும் பொலீசார் கூறியுள்ளபோதும் சட்டவிரோத நடவடிக்கைகளில் குறிப்பாக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டிருப்பவர்களிடம் நவீன ஆயுதங்கள் இருப்பது இத்தகைய சம்பவங்கள் மூலம் அம்பலமாகியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## படைக்கு ஆட்சேர்ப்பாம்

(கொழும்பு)

அண்மையில் சிறிலங்கா இராணுவத்திற்கு புதிதாக நடைபெற்ற ஆட்சேர்ப்பு, இராணுவத்தின் பலத்தை மேலும் அதிகரிப்பதற்கு அல்ல படையில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பவே என கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்களில் சிறிலங்கா இராணுவமே அதிக ஆட்சேதத்தைக் கண்டிருந்தது. அத்துடன் இராணுவச் சிப்பாய்கள் பலர் போருக்கு அஞ்சி படையை விட்டு விலகியோடும் சம்பவங்களும் தற்போது அதிகரித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்காரணங்களினால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பவே அண்மையில் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றது. படைப் பலத்தை மேலும் அதிகரிப்பதற்காக அல்ல என மூத்த இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## எக்கல பகுதியில் தமிழ் இளைஞர் கைது

[கொழும்பு]

வடபகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரை சிறிலங்காப் பொலீசார் எக்கல பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளனர். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவ் இளைஞர் விடுதலைப் புலிகளின் குண்டுத்தயாரிப்பில் நிபுணத்துவம் பெற்றவர் எனவும் கொழும்பில் உளவு பார்ப்பதற்காக வந்தார் எனவும் பொலீசார் தெரிவித்துள்ளனர்.

எக்கல பகுதியில் விடுதலைப் புலிகள் நடமாடுவதாகக் கிடைத்த ஒரு தகவலை அடுத்து அங்கு சென்ற பொலீசார் எக்கல பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடாத்திய போதே இவ் இளைஞன் கைது செய்யப்பட்டார் என பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## போலி பாஸ்போட்டுடன் 30 தமிழர் கைதாகினர்

[கொழும்பு]

போலிக் கடவுச்சீட்டுடன் 30 தமிழர்களை கொழும்பு பொலீஸார் கைது செய்துள்ளனர். போலிக் கடவுச் சீட்டுகளுடன் வெளி நாடு செல்ல எத்தனித்த போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து 18 பெண்களும் 12 ஆண்களும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனராம்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களுக்குப் பெருந் தொகைப் பணம் கொடுத்துக் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டதாகக் கைதானவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள 30 பேர் மீதும் நீர்கொழும்பு பொலீஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவால் வழக்குத் தொடரப் பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்த போதிலும் கைது செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை வெளியிட மறுத்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஊரடங்கு நீக்கம் நடவடிக்கை தொடருகிறது

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ள போதிலும் வவுனியாவின் வடக்கு கிழக்கு பகுதியில் பதவியா அருகில் கொமாண்டோப் படையினர் மேற்கொண்டு வரும் 'ஒபரேஷன் புல்மூன்' இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

**உளவாளிகள் !!!**

**அவதானமாக இருக்கவும்...!**

ஈனங்கொடுக்கின்ற தானங்கள் ஏற்காமல்,

மானங் கெடுக்கின்ற மாற்றானை மாய்த்திடுவோம்

சண்டே ரைம்ஸ் அரசியல் விமர்சகர் தெரிவிக்கிறார்.

இப்போது தேசிய மட்டத்திலான ஒரு பாதுகாப்புத் திட்டம் உருவாகி வருகிறதாம். எனினும் இதுபற்றி பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்க மறுத்து வருவதாக அரசியல் விமர்சகர் தாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கில் அரசின் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தும் முகமாக தரை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும் அதே சமயத்தில் வடக்கில் சிறிலங்கா விமானப்படை தொடர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

லில் விட்டு கரைசேர்ந்துள்ளார்கள். இரவு 9.00 மணியில் இருந்து சுமார் ஒரு மணித்தியாலம் வரை இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் நிலவின் ஒளியைப் பயன்படுத்தி கடற்படையினரின் படகுகள் மீனவர்களின் படகுகளை மிகவும் அண்மித்து வந்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (17)

### இனப்பிரச்சினை விடயத்தில்

# அரசின் போக்கு குறித்து மேற்கு நாடுகள் அதிருப்தி

[கொழும்பு]

கடந்த ஆண்டின் நடுப்பகுதி முதலே விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்து வருவதாகவும், ஆனால் சிறிலங்கா அரசு அதற்கு போதுமான ஊக்கம்கொடுக்கவில்லை எனவும் மேற்குநாட்டு ராஜதந்திரிகள் சிலர் சிறிலங்கா அரசிடம் அதிருப்தி தெரிவித்ததாக அறியவருகின்றது.

அண்மையில் மேற்கு நாட்டு ராஜதந்திரி ஒருவர் இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு எடுத்த முன் முயற்சிகள் பற்றியும் சுட்டிக்காட்டியுள்ள அரசியல் அவதானிகள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் தமிழர்கள் சிலர் உத்தியோகப்பற்றற்ற முறையில் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முயற்சித்த போதும் கூட அரசாங்கம் உரிய முறையில் கையாளவில்லை என்றும் கூறப்படுகிறது.

## சிறிலங்காமனித உரிமைமீறல் கனடா, அவுஸ். கண்டனம்

[ஜெனிவா]

ஜெனிவா நகரில் இடம்பெற்ற மனித உரிமைகள் மகாநாட்டில் கனடாவும், அவுஸ்ரேலியாவும் சிறிலங்கா அரசைக் தாக்கிப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது. கனடாவைவிட அவுஸ்ரேலியப் பிரதிநிதி சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதைக் கடுமையாகச் சாடியதாக கொழும்பில் அரச சார்பற்ற மனித நேய ஸ்தாபனம் ஒன்று தெரியப்படுத்தியது.

அதே வேளை, இங்கிலாந்தும், அமெரிக்காவும் இந்த மகாநாட்டில் சிறிலங்காவை ஆதரித்துத் தணிந்து போனதாகவும் அதே தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

இடம் பெயர்ந்து கனடாவிலும், அவுஸ்ரேலியாவிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செயலாளர் பதவி வோல்டர் முன்னணியில்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக தற்போது கடமையாற்றிவரும் ஜெனரல் சிறில் ரணதுங்க இம்மாத இறுதிக்குள் அவுஸ்திரேலிய தூதுவராக பதவியை ஏற்று சென்று விடுவார் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி வகிக்க மூவரின் பெயர் பாதுகாப்பு வட்டாரங்களில் அடிபடுகின்றது. தற்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் எயர்வைஸ்சீப் மார்ஷல் வோல்டர் பெர்னான்டோ, கூட்டுப்படைத் தலைமையக தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, பொலிஸ்மா அதிபர் ஏனர்ஸ்ட் பெரேரா ஆகியவர்களில் ஒருவரே இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்களில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக வோல்டர் பெர்னான்டோவே நியமிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவருக்கே கூடிய செல்வாக்குஉள்ளதுடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய முன் அனுபவமும் உள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களில் பரவலாக கருதப்படுகின்றது.

### கலந்துரையாடல்

கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர் அனைவரையும் இன்று பிற்பகல் 2. 00மணிக்கு கிளாலிப் படகுத்துறைக்கு வருகைதருமாறு யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

## அரசியல் பின்னணி?

(கொழும்பு)

அண்மையில் கோதமி புரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த நிகால் சாந்திகுமார் அல்லது மாலுநிகால் என்பவர் கடந்த ஆண்டில் அத்த பத்திரிகையில் கேலிச் சித்திரக்காரர் ஜிப்றி யூனூஸ் மீது தாக்குதல் நடத்தியவரின் நெருங்கிய சகா என்று தெரியவந்துள்ளது.

கொழும்பில் சன நெரிசல் மிகுந்த பொரளைப் பகுதியில் அண்மையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மாலுநிகால் மற்றும் சிசிர குமார் ஆகியோர் கொல்லப்பட்டதும் மற்றும் நால்வர் காயமடைந்ததும் தெரிந்ததே. இத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்களை பொலீசார் இன்னமும் இனம் காணாதபோதும் இத்தகைய சம்பவங்களுக்கு பின்னணியில் அரசியல் தொடர்புகள் இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற மற்றுமொரு சம்பவம் மாளிகாவத்தைப் பகுதியில் நடைபெற்றதும் நான்கு பேர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இந்த இரு சம்பவங்களுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்றும் இவை தனித்தனியான சம்பவங்களே என்றும் பொலீசார் கூறியுள்ளபோதும் சட்ட விரோத நடவடிக்கைகளில் குறிப்பாக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டிருப்பவர்களிடம் நவீன ஆயுதங்கள் இருப்பது இத்தகைய சம்பவங்கள் மூலம் அம்பலமாகியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சீமெந்துகட்டட தொழிலாளர் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சிறிலங்கா அரசின் பொருளாதாரத்தடை மற்றும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்குமுறை ஆகியவற்றை கண்டித்தும் சீமெந்துக் கட்டடத் தொழிலாளர்கள் பலர் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தினர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் பற்றிக்ஸ் சந்தியில் அமைந்துள்ள சீமெந்து கட்டட தொழிலாளர் சங்க கிளை அலுவலகத்திலிருந்து இப் பேரணி ஆரம்பமானது.

பேரணியில் கட்டடத்தொழிலாளர்களும், வர்ணம் பூசும் தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். பேரணி யாழ். உதவி அரச அதிபர் செயலகத்தை சென்றடைந்தபோது சங்கத்தின் கிளைத்தலைவர் மகஜரை யாழ். உதவி அரச அதிபரிடம் கையளித்தார்.

இதனையடுத்து பேரணி கண்டிவீதி வழியாக யாழ். செயலகத்தை சென்றடைந்தது. அங்கு மகஜரை அரச அதிபர் சார்பில் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பெற்றுக்கொண்டாா.

பேரணியில் சென்றவர்கள் பல கோஷங்களையும் எழுப்பிச்சென்றனர்.

# சமஷ்டியமைப்பை உருவாக்க வாக்கெடுப்பிற்கு யோசனை

(கொழும்பு)

மாகாணசபை முறையை நடைமுறைப் படுத்துவதா அல்லது சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவதா என்பது குறித்து வெகுஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் படி சிலர் அரசுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

வெகுஜன வாக்கெடுப்பு பற்றிய தீர்மானம் பாராளுமன்றத்தில் இரண்டில் மூன்று பெரும்பான்மை வாக்குகளினால் அங்கீகரிக்கப்பட்டால் தான் வெகுஜன வாக்கெடுப்பை நடத்த முடியும் என்று அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபை ஆட்சி முறை பற்றி அரசியல் கட்சிகள் பல்வேறு கருத்துக்களை தெரியப் படுத்தி வரும் வேளையில் மாறாக சமஷ்டி ஆட்சி அமைப்பு பற்றிய ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாகாண சபைத் தேர்தலுக்குப் பதிலாக வெகுஜன வாக்கெடுப்பை நடத்துவது றறித்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தளபதி கிட்டுவின் சடலத்தை

## ஒப்படைக்கக் கோரிய மனு தள்ளுபடி

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் கப்பலை இந்திய கடற்படை வழிமறித்தபோது வீரச்சாவடைந்த புலிகளின் மூத்த தளபதி கிட்டுவின் சடலத்தை ஒப்படைக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனு சென்னை உயர்நீதி மன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய இயக்கத்தலைவர் நெடுமாறன் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதிபதிகள் இம்மனுவை தள்ளுபடி செய்தனர்.

## தெரிவுக்குழு இன்று கூடும்

பாராளுமன்ற தெரிவுக்குழு மூன்று மாதங்களின் பின் இன்று மீண்டும் கூடுகின்றது. இந்திய அரசமைப்பு முறையிலான அதிகார பகிர்வுத் திட்டம் இன்று கூடும் தெரிவுக் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப் படும் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன

இனப்பிரச்சனை தொடர்பான தனது இறுதி அறிக்கையை பாராளுமன்றத் தெரிவுக்குழு இம்மாதத்திற்குள் சமர்ப்பிக்கும் என முன்னர் கூறப்பட்டது. இங்கு குறிப்பிடத்தக்கது

## வரி விளம்பரம்

### பாலராசிரியராக....

பாலராசிரியராக வர சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளலாம். நேரில் வரமுடியாதோர் தபால்வழியிலும் பயிலலாம். க.பொ.த. (சா த) கடைசித் தகைமை ஆகும் வரும் சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்குச் சந்தித்தும் ஆவனசெய்யலாம்.

பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: உயர்கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி -யாழ்ப்பாணம். (4436)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகலறேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள், மற்றும் மின்சார உபகரணங்கள், எலெக்றோணிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள், மேசை-சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்; டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்3, கண்டிவீதி (இலங்கை வங்கி அருகாமையில்) சாவகச்சேரி. (சி/6082)

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

புத்தூர் எவறெஸ்ற் வி கழக நிதிக்காக 10-03-93இல் நடைபெற இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 31-03-93க்கு பிற் போடப்பட்டுள்ளது. தொடர்ந்து விற்பனை செய்யப்படும் சீட்டுகளும் செல்லுபடியாகும் என்பதை அறியத் தருகின்றோம். நிர்வாகிகள். [4444

## போசாக்கு அளிக்க திட்டம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு பிரதேசம் போசாக்கற்ற பிரதேசமாகக் கருதப்பட்டு அப்பகுதியில் வசிக்கும் சிறார்களுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் போசாக்கு அளிக்கும் திட்டமொன்றிற்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் ரூ. 20,000தை ஒதுக்கியிருப்பதாக கிளிநொச்சிப் பகுதிச் செயலாளர் பொன். விநாயகமூர்த்தி கூறியுள்ளார். இத்திட்டத்தின் கீழ் கிராம ரீதியாக குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் போசாக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். [16]

## யாழ். செயலகத்தில் மகளிர் தினம்

யாழ். செயலக நலன்புரிச் சங்கத்தினரும், யாழ். இலக்கிய வட்டத்தினரும் இணைந்து சர்வதேச மகளிர் தின விழாவை நாளை 12ஆம்திகதி பகல் 12 மணியளவில் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளனர்.

இவ்விழாவுக்கு யாழ். அரசாங்க அதிபரும், யாழ். செயலக நலன்புரிச் சங்கத் தலைவருமான திரு. க. மாணிக்கவாசகர் அவர்கள் தலைமை தாங்குகிறார். வரவேற்பாளராகத் திரு ஐயா சச்சிதானந்தன் (இணைச் செயலாளர் யாழ். இலக்கிய வட்டம்) அவர்களும் கருத்துரைகளைத் திருமதி ப. திலகநாயகம்(மேலதிக அரச அதிபர் யாழ்.செயலகம்), திருமதி சி. துரைராசா (முகாமையாளர் மேல் தரக்கிளை இலங்கைவங்கி), திருமதி ச. சிவச்சந்திரன் (தலைவர் மகளிர் அபிவிருத்தி நிலையம்) அவர்களும், நன்றியுரையை செல்வி சிவனேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களும் ஆற்றவுள்ளனர்.

இவ்விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். செயலக நலன்புரிச்சங்கத்தினரும், யாழ் இலக்கிய வட்டத்தினரும் அழைத்துள்ளனர். [சி]

## இரவு நேர சேவைக்கு மருத்துவ மாது நியமனம்

குருநகரில் அமைந்துள்ள தங்கம்மா மருத்துவ விடுதியில் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்படும் தாய்மார்களுக்கான சேவையை வழங்குவதற்காக இரவில் முழு நேரமும் கடமையாற்றுவதற்காக யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் மருத்துவ மாது ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் உள்ள புதிய கல்வி நிலையத்தினுள் பூட்டிய நிலையில் இருந்த மாணவர் ஒருவரின் சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த ஞாயிறன்று பட்டப் பகலில் நிகழ்ந்துள்ளது. தூர இடத்தில் இருந்து 5-ம்ஆண்டு புலமைப்பரிசில் பயிற்சி பரீட்சை எழுதுவதற்கு வந்திருந்த மாணவருடைய 5000 ரூபா பெறுமதியான சொப்பர்சைக்கிளே திருடப்பட்டதாகும்.

## காகிதாதிகள் பற்றாக்குறை

[யாழ்ப்பாணம்]

யாழ். பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அலுவலகத்தில் பலத்த காகிதாதி பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிய வருகிறது.

இக்கோட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான சுற்றுநிருபங்களை அனுப்புவதற்குக் கூட காகிதாதிகள் பற்றாக்குறையாக இருப்பதாக இக் கல்விக் கோட்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். [நி]

## ஒரே குடும்பத்தில் மூவருக்குதொழுநோய்

(யாழ்ப்பாணம்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தொழுநோய் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வசாவிளானைச் சேர்ந்த இவர்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக தற்போது சரசாலை வடக்கு, சாவகச்சேரியில் வசித்து வருகின்றனர். (நி)

## புதிய சர்வதேச விமான நிலையம்

[கொழும்பு]

பொலநறுவை மாவட்டம் ஹிங்குராக்கொடவில் புதிய சர்வதேச விமான நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது எம்பிலிப்பிட்டியால் நடைபெற்ற மகாவலி வார விழாவின் போது ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இத்தகவலை வெளியிட்டார்.

கிராமங்களில் உற்பத்தியாகும் வேளாண் பொருள்களையும், ஏனைய பண்டங்களை

## நிதி உதவிக்கான நாடகம்

யாழ். பல்கலைக்கழக வணிகமுகாமைத்துவ மாணவர் மன்ற நிதிக்காக

சி. ஜெயசங்கரின்

**"தம்ம தீபத்தின் கதை"**

( நாடகம் )

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 3 காட்சிகளாக

இன்று மாலை 4-30 மணிக்கும் மற்றும் சனி (13-3-1993) மாலை 3.00 மணி மாலை 5.00 மணி.

நுழைவுச் சீட்டுக்கள் மண்டப வாயிலில்.

வணிக முகாமைத்துவ மாணவர் மன்றம்.


அன்பளிப்பு:

**திரு.உதயன் - பொருளியல்**

C. C. A. கல்வி நிறுவனம்

யாழ்ப்பாணம். (4440)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

திரு. வீரமாணிக்கம் **சின்னத்துரை**

(தலைவர்)

(இளங்கதிர் சனசமூக நிலைய ஸ்தாபகரும் நீண்டகால தலைவரும்)

பாரதி வீதி, பத்தைமேனி, அச்சுவேலி.

| அன்னைமடியில்: | அரனடியில் |
|---|---|
| 24-3-1918 | 9-02-1993 |

எங்கள் குடும்பத்தின் தலைவனாய், வழி காட்டியாய் ஒளி விளக்காய் அன்புடன் வாழ்ந்து ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட சிவநெறி வழுவா எங்கள் தந்தையே! உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்தில் அணையா ஒளித்தீபமாக ஒளிவீசும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள்

## வடபிராந்திய சுருட்டுத்தொழிலாளர் சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபை தெரிவும்

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி

காலம்: 16 - 03 - 1993 செவ்வாய்

நேரம்: மாலை 2.00 மணி

இக்கூட்டத்திற்கும் நிர்வாகசபைத் தெரிவிற்கும் தமிழீழத்திலுள்ள தமிழ்த்தாய் பெற்றெடுத்த சகல சுருட்டுத் தொழிலாளர்களும் சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

நிர்வாகிகள்

(சி-6173)

## 8-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 22-07-1930

மறைவு 04-03-1993

**திரு. க. இரத்தினசபாபதி**

அவர்கள்

(பூங்கனியியல் முகாமையாளர்)

மேஜர் பிரதாப் செட்டி மாதிரிப்பண்ணை கோப்பாய்

எமது கழகத்துடன் இணைந்த காலம் முதல் தனது அனுபவம், ஆற்றல், உழைப்பு முழுவதையும்பயன்படுத்தி பூங்கனியியல் பகுதியின் வளர்ச்சிக்காக அயராதுஉழைத்த திரு. க. இரத்தினசபாபதி அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

(சி-6172)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-11

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவு-மாங்குளம், துணுக்காய், மல்லாவிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஒரே கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-

ஜீவா (தங்கையா செங்கரகான் - பெரியகும்புளை செட்

பரிசுச்சீட்டிழுப்பு தவிர்க்க முடி
யாத காரணத்தால் 31-03-93
க்கு பிற்போடப்பட்டுள்ளது.
தொடர்ந்து விற்பனை செய்
யப்படும் சீட்டுகளும் செல்லு
படியாகும் என்பதை அறியத்
தருகின்றோம். நிர்வாகிகள்.
[4444

...யுரையை செல்வி சிவனேஸ்
வரி பாலசுப்பிரமணியம் அவர்
களும் ஆற்றவுள்ளனர்.

இவ்விழாவில் அனைவரை
யும் கலந்து சிறப்பிக்குமாறு
யாழ். செயலக நலன்புரிச்சங்
கத்தினரும், யாழ் இலக்கிய
வட்டத்தினரும் அழைத்துள்
ளனர். [சி]

...தியசாலையில் அனுமதிக்கப்
பட்டு சிகிச்சை பெற்று வரு
கின்றனர்.

வசாவிளானைச் சேர்ந்த
இவர்கள் இராணுவ நடவடிக்
கை காரணமாக தற்போது
சரசாலை வடக்கு, சாவகச்
சேரியில் வசித்து வருகின்ற
னர். (நி)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப்டினன்ட் டேவிற்

(மகேந்திரம் - ரவீந்திரராஜா)

ஈழத்தாயின் மடியில் 07 - 05 - 1971
ஈழவர் மனங்களில் 11 - 03 - 1992

வேங்கையென நீஎழுந்து விருப்புடனே களம் சென்றாய்,
ஓங்கு தமிழ்மானம் காத்திடவே போர் புரிந்தாய்,
வீங்கு புயம் கொண்ட எங்கள் - லெப்டினனே டேவிற்
இன்று உன்வழியில் நாம் தொடருகின்றோம் உன் பயணம்.

உன் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

சாதனைகள் படைத்து சரித்திரம் ஆனவனே
இன்று ஆண்டோ ஒன்றாகுது அண்ணா
ஆனால் ஆறாது எம் மனது
தட்டுவன் கொட்டியிலே-எதிரி தலைகளை தகர்த்துவிட்டு
விண்நோக்கி சென்றனையே
உன் பின்னே நானும் களம் வந்தேன் - அண்ணா
உன்னை நினைக்கையிலே புதுவீரம் தோன்றுதடா
காலம் ஒன்று கைகூடும் உன் கனவுகள்
அன்று நனவாகும்.

களத்தில் நிற்கும் தங்கை சுதந்திரா
பெரியப்பா நாகேந்திரம் குடும்பத்தினர்.

அம்பலவன் பொக்கணை,
முல்லைத்தீவு. (4437)

## புதிய சர்வதேச விமான நிலையம்

[கொழும்பு]

பொலநறுவை மாவட்டம் ஹிங்குராக்கொடவில் புதிய சர்வதேச விமான நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது எம்பிலிப்பிட்டியால் நடைபெற்ற மகாவலி வார விழாவின் போது ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இத்தகவலை வெளியிட்டார்.

கிராமங்களில் உற்பத்தியாகும் வேளாண் பொருள்களையும், ஏனைய பண்டங்களையும் உலகச் சந்தைகளுக்கு அனுப்ப இந்த விமான நிலையம் உதவும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.


### POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION


Receiving of applications for admission to the Postgraduate Diploma in Public Administration has been extended to *1993-03-16*.

Applicants should have adequate proficiency in English to follow thecourse.

This is a one year full time course. Lectures will be conducted on Saturdays and Sundays and in the evenings on selected week-days. The course is fee levying. Candidates should sit an aptitude test oral, which is tentatively fixed for *1993-04-03*. Graduates or those who have professional qualifications equivalent to a degree are eligible to apply Prospectus and application forms are available with Senior Assistant Registrar Academic Branch, University of Jaffna on payment of Rs 25/-.

REGISTRAR

UNIVERSITY OF JAFFNA
*1993-03-10*
(சி/6170)

அமரர்

## திரு. வீரமாணிக்கம் சின்னத்துரை

(தலைவர்)

(இளங்கதிர் சனசமூக நிலைய ஸ்தாபகரும் நீண்டகால தலைவரும்)

பாரதி வீதி, பத்தைமேனி, அச்சுவேலி.

அன்னைமடியில்: 24-3-1918
அரனடியில் 9-02-1993

எங்கள் குடும்பத்தின் தலைவனாய், வழி காட்டியாய் ஒளி விளக்காய் அன்புடன் வாழ்ந்து ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட சிவநெறி வழுவா எங்கள் தந்தையே! உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்தில் அணையா ஒளித்தீபமாக ஒளிவீசும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வமாகிய சங்கிலிவைரவரை பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியை மனப்பூர்வமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆக்லேன்,
உடுவில். [4443]

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
15-05-1915

உதிர்வு
08-02-1993



## திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பு

(வேலணை கிழக்கு)

அன்பின் சகோதரியே!

நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் முடிவடைகின்றன. தாங்கள் கொழும்பில் காலமானதை அறிந்து கவலை அடைந்தோம். காலன் இவ்வளவு தூரம் உங்களைக் கொண்டு செல்வான் என்று அறிந்திலோம் உமது பிரிவால் துயருறும் நாம் எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்
இ. சுப்பிரமணியம் (சகோதரன்)
சு. கந்தஞானி (மருகர்)
(நியூ ராதிகா நகைமாளிகை)

இல 128,
2,ஆம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம். (4441)

மேஜர் பிரதாப் செட்டி மாதிரிப்பண்ணை கோப்பாய்

எமது கழகத்துடன் இணைந்த காலம் முதல் தனது அனுபவம், ஆற்றல், உழைப்பு முழுவதையும்பயன்படுத்தி பூங்கனியியல் பகுதியின் வளர்ச்சிக்காக அயராதுஉழைத்த திரு. க. இரத்தினசபாபதி அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டுக் கழகம்
(சி-6172)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-11

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவு-மாங்குளம், துணுக்காய், மல்லாவிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஒரே கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-

ஜீவா (கந்தையா கெங்காதரன் - பெரியதம்பனை,செட்டிகுளம் - வவுனியா)

ரஞ்சன் (சரவணமுத்து சத்தியசீலன்- 2-ம்படிவம்,வவுனிக்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு)

இதே தினம் வரையான இரு நாட்களும் இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது தன் மானங்காக்கும் பொருட்டுத் தற்கொலை செய்து கொண்ட இளம்பெண் மற்றும் படுகொலை செய்யப்பட்ட 7 பேர் ஆகிய 8 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

திருமால் (வெள்ளைக்குட்டி துரையன்- காரைதீவு-அம்பாறை)

1988ஆம் ஆண்டு மட்டு - பெரியபுல்லுமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

யோகேஸ் (பிரான்சிஸ் மனோகரன்- பெரியபுல்லுமலை - மட்டு.)

திருமலையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்றை வழிமறித்த சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 15 தமிழ்ப் பயணிகள்.

முல்லைத்தீவு - முத்தையன் கட்டுப் பகுதியில் இந்தியப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 4தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு திருமலை - கந்தளாய் அணைக்கட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கிய போது வீரச்சாவெய்திய-

வர்ணன் (வேலாயுதம் ரதீஸ்குமார் - கிறீன்வீதி, கிளிவெட்டி மூதூர் - திருமலை)

1992ஆம் ஆண்டு ஆனையிறவு தட்டுவான் கொட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவக்காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

ராகுல் - ராகுல்ராஜ் (மகாலிங்கம் பகீரதன் - பிள்ளையார் கோவிலடி- மட்டு)

லெப். டேவிட்-சந்திரன் (மகேந்திரன் சியாமணி- சிவன் கோவிலடி, புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு)

கப்டன் சிறீசங்கர் (கார்த்திகேசு ஜெகதீஸ்வரன்- வேலணை கிழக்கு-தீவகம்-யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6169)

நல்லூர் இள நூலகம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

உடுக்கை இழந்தவன் கை போல
இடுக்கண் களைவதாம் நட்பு.
— திருவள்ளுவர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05


## கூட்டணி முறிந்தது!

பல மாதங்களாக நீடித்த அ. தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி பற்றிய கேள்வி தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்புடன் முடிவுக்கு வந்துள்ளது. அ. தி. மு. க விற்கும் – காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கூட்டணி முறிந்து விட்டதாகவும், இந்திய பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கு அ. தி. மு. க. வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாகவும் தமிழக முதலமைச்சர் நேற்று முன்தினம் இரவு அறிவித்தார்.

அ.தி.மு.க. - காங்கிரஸ் உறவில் ஏற்பட்ட விரிசல் கடந்த ஆண்டு மதுரையில் நடத்தப்பட்ட அ.தி.மு.க வின்வெற்றி மாநாட்டுடன் ஆரம்பமாகி கடந்த வருடம் டில்லியில் பிரதமர் நரசிம்மராவ் கூட்டிய தேசியபாதுகாப்புமாநாட்டுடன் உச்சநிலை அடைந்திருந்தது. இந்நிலையில் அ.தி.மு.க விற்கும் – காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இவ் உறவு முறிவானது பலராலும் எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான். ஆனாலும் இது தமிழகஅரசியலிலும், இந்திய அரசியலிலும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை.

இவ் உறவு நிலை முறிவு ஏற்பட்டுள்ள காலமானது இந்திய அரசியலில் மிகுந்த நெருக்கடி மிக்க பருவமாகும். கடந்த டிசம்பர் மாதம் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து உருவாகிய பதற்ற நிலை இன்றும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது, பாபர் மசூதியை நரசிம்மராவ் காப்பாற்ற முடியாமல் போனதால் கொந்தளிப்பு நிலை உருவாகியதென்றால், அதன் பின்னர் பம்பாயில் ஏற்பட்ட இனக்கலவரமும், அதைத் தொடர்ந்து டில்லியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த முற்பட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் முயற்சியை பொலீஸ் படையைக் கொண்டு மத்திய அரசு முறியடித்தமையும் ஒரு பதற்றமான சூழ்நிலையே தொடர்ந்தும் நிலவுவதற்கு வழிவகுத்ததெனலாம். இதன் தொடர்பாக பாராளுமன்றத்தில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அ. தி. மு. க. - காங்கிரஸ் உறவு முறிந்தமை காங்கிரஸ் கட்சியைப் பொறுத்து விரும்பத் தகாததொன்றுதான்.

ஆனாலும் மத்தியில் ஆட்சி புரியும் காங்கிரஸ் கட்சி - ஒரு சிறுபான்மை அரசாங்கமாக இருப்பினும் - அ. தி. மு. க. உறுப்பினர்கள் வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்வதால் நரசிம்மராவ் ஆட்சிக்கு உடனடியான ஆபத்து

## விளையாட்டு

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி புலோலி விளையாட்டு மைதானத்தில் மகாலிந்தியாலய அதிபர் திரு. இ. ஞானசேகரம்பிள்ளை தலைமையில் இன்று நடைபெறும். இதில் வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார். (25)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்லங்களுக்கு இடையேயான வருடாந்த தடகளப் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். கொத்தணி அதிபர் வி. கணேசராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவைப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(கொடிகாமம்)

யாழ். குடமியன் அ. த. க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி ம. வீரகத்தி அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அவர்கள் கலந்து கொள்வார். (86)

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டு துணைவி அ. மி. த.க. பாடசாலையில் இல்ல மெய்வல்லுனர்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார் என தெரியவருகின்றது. (நி)

(குருநகர்)

யாழ். சென். றோக் றோ. க. வித்தியாலய உடற்பயிற்சிப் போட்டிகள் நேற்றுமுன்தினம் பகல்2 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. ஜே.யேசுதாஸன் தலைமையில் றோக்ஸ்விளையாட்டு மைதானத்தில் நடை

## பொலீஸ் திணைக்களத்தில்
# அரசியல்வாதிகளின் தலையீடு
# பொலீஸ்மா அதிபர் முறையீடு

(கொழும்பு)

அரசியல் வாதிகளின் சிபார்சுக் கடிதங்களைப் பெற்றுப் பதவி உயர்வுகள் கோரும் பொலீஸ் அதிகாரிகள் குறித்து பொலீஸ்மா அதிபர் பிரதமர் டி.பி. விஜயதுங்காவுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

பதவி உயர்வு கோரி இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் சார்ஜன்டுகள் கொண்டு வந்த சிபார்சுக் கடிதங்களை உரிய அரசியல்வாதிகளுக்குத் திருப்பி அனுப்பிய பொலீஸ்மா அதிபர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்காற்று நடவடிக்கையும் எடுக்கும்படியும் பணித்துள்ளார்.

பொலீஸ் மாஅதிபர், சாதாரண பொலீஸார் ஏனைய மட்டங்களில் உள்ள அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று அலரி மாளிகையில் பிரதமரைச் சந்தித்து அரசியல் வாதிகளின் தலையீடு குறித்து முறைப்பாடு தெரிவித்துள்ளது.

பதவியிலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு மீளவும் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகம் வழங்குவது தொடர்பாக மூத்த பொலீஸ்சுப்பிறின்டென்ற் ஒருவர் ஜனாதிபதிக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளார்

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையின் தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர ஒப்பந்த அடிப்படையில் தொழில் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டிருப்பதாக மேற்கோள் காட்டி ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட அதிகாரிகள் 'தவிர்க்க' முடியாது என்ற வட்டத்துக்குள் வரமாட்டார்கள் என்றும் அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## சம்பள உயர்வை ஏற்கப் போவதில்லை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வைத் தான் ஏற்கப் போவதில்லை என்று சிறிலங்கா சுகந்திரக்கட்சி தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் மேர்வின் டி சில்வா தெரிவித்துள்ளார். பாராளுமன்றச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இந்த முடிவைத் தெரியப்படுத்தி உள்ளார்.

ஏழைகளின் துயர்துடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் வரை அதிகரித்த படி உயர்வை தான் ஏற்கப் போவதில்லை என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அனுமதிக்கான சலுகையை நீடிக்க முடியாது

பல்கலைக்கழக வட்டாரங்கள் தகவல்

[கொழும்பு]

வயது குறைந்த மாணவர் மற்றும் படை வீரர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியில் வழங்கப்பட்டிருந்த சலுகை நிறுத்தப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. பல்கலைக் கழகங்களில் வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதால் மேற்படி சலுகையை மேலும் நீடிக்கமுடியாதிருப்பதாகப்பல் கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கண்பார்வையை இழந்தவர்கள், வயது கூடிய மாணவர்கள், பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள், மற்றும் சமூகத்துக்கு அளப்பரிய சேவைகள் செய்தவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் சலுகை அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக வளங்கள் குறைவாக இருக்கும் வேளையில் பல்கலைக்கழக அனுமதி அதிகரித்திருப்பதால் மேற்கொண்டும் விசேட சலுகை அடிப்படையில் அனுமதிவழங்குவதைத் தொடரமுடியாது என பல்கலைக்கழக வேந்தர்கள் பல்கலைக்கழக மானியங்கள் குழுவிற்கு தெரிவித்துள்ளார்கள்.

மருத்துவம், பொறியியல் மற்றும் பல்வைத்தியத் துறைகளுக்கு இவ்வருடம் வரை சலுகை அடிப்படையில் ஒரு வீதம் அனுமதி வழங்கப்பட்டது. மற்றும்படி, பாடத்தோடு இணைந்த செயற்பாடுகளில் தேசிய அடிப்படையில் சாதனை நிலைநாட்டிய மாணவர்களுக்கும் பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம, கலை, வர்த்தகம் ஆகிய கற்கை நெறிகளில் சலுகை அடிப்படையில் இரண்டு வீத இடங்கள் பல்கலைக் கழக அனுமதியில் வழங்கப்பட்டன.

# மத்தியில் காங்கிரஸ் ஆதரவு
# அ.இ.அ.தி.மு.க. மீளப்பெறும்

## காங்கிரசுடன் உறவு முறிந்தது
## சென்னையில் ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் கட்சிக்கும், தமது கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு முறிந்து விட்டதாக தமிழக முதலவரும் அ. இ. அ. தி. மு. க. பொதுச்

சவால் விட்டுப் பேசியுள்ளார்.

இதேபோல தமிழக மாநில காங்கிரஸ் தலைவர்கள் பலரும் நேசக் கட்சியான அ.இ. அ. தி. மு. க. பற்றி இழித்தும், பழித்தும் பேசி வருகி

ஜெயலலிதா இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் காங்கிரஸ் தலைவர் என்ற ரீதியில் பிரதமர் நரசிம்மராவ் மௌனத்தையே கடைப்பிடித்துள்ளார் என்றும் குற்றம் சுமத்தியுள்

## விசேட பொதுக் கூட்டம்

[கொழும்புத்துறை]

யாழ். அம்பாள்வீதி நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலையத் தலைவர் திரு. க. கேந்திரன் தலைமையில் மாலை 5.30 மணிக்கு நிலையமண்டபத்தில் நடைபெறும். [24]

## பாலர்ஆசிரியருக்கான விசேட கூட்டம்

[பருத்தித்துறை]

யாழ். மாவட்ட பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான விசேட கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இக்கூட்டம் 21-3-93 காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியைகளும் கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு.டிவகலாலா அறிவித்துள்ளார். [25]

## கருத்தரங்கு

[தொல்புரம்]

பொதுச் சுகாதாரப் பகுதியினரால் கிராமங்கள்தோறும் சுகாதாரக் கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி கருத்தரங்குகள் சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களில் காலை வேளைகளில் இடம்பெறவுள்ளதென சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. க. கந்தையா அவர்கள் தெரிவித்துள்ளார். [36]

## உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் ஐந்து அங்கத்தவர்களுக்கு மேல் உள்ள 'அ' 'உ' அட்டைகளுக்கு 5 கிலோ அரிசியும், 2கிலோ மாவும் வழங்கப்படுகிறது.

ஐந்துஅங்கத்தவர்களுக்குகீழ் உள்ளமேற்படி அட்டைகளுக்கு 5 கிலோ அரிசியும், 2 கிலோ மாவும் வழங்கப்படுகிறது. அத்துடன் 10, 11ஆம் கட்ட உணவு முத்திரைகளுக்கும் மாவும், அரிசியும் வழங்கப் படுகிறது.

## கண்டெடுப்பு

குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி எமது பணிமனையில் பெற்றுக்கொள்

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து உருவாகிய பதற்ற நிலை இன்றும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது, பாபர் மசூதியை நரசிம்மராவ் காப்பாற்ற முடியாமல் போனதால் கொந்தளிப்பு நிலை உருவாகியதென்றால், அதன் பின்னர் பம்பாயில் ஏற்பட்ட இனக்கலவரமும், அதைத் தொடர்ந்து டில்லியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த முற்பட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் முயற்சியை பொலீஸ் படையைக் கொண்டு மத்திய அரசு முறியடித்தமையும் ஒரு பதற்றமான சூழ்நிலையே தொடர்ந்தும் நிலவுவதற்கு வழிவகுத்ததெனலாம். இதன் தொடர்பாக பாராளுமன்றத்தில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அ. தி. மு. க. - காங்கிரஸ் உறவு முறிந்தமை காங்கிரஸ் கட்சியைப் பொறுத்து விரும்பத் தகாததொன்றுதான்.

ஆனாலும் மத்தியில் ஆட்சி புரியும் காங்கிரஸ் கட்சி - ஒரு சிறுபான்மை அரசாங்கமாக இருப்பினும் - அ. தி. மு. க. உறுப்பினர்கள் வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்வதால் நரசிம்மராவ் ஆட்சிக்கு உடனடியான ஆபத்து எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சில வேளை வி. பி. சிங்கின் ஜனதா தளத்தையும், என். ரி. ராமராவின் தெலுங்கு தேசத்தையும் காங்கிரஸ் கட்சி துண்டாட முன், அதாவது ஒரு வருடத்திற்கு முன் இவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பின் நரசிம்மராவ் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி வந்திருக்கலாம். ஆனால் இன்றைய சூழ்நிலை வேறு.

இதேவேளை அ.தி. மு. க. - காங்கிரசுடனான தனது உறவை முறித்துக் கொண்டமையானது தமிழக அரசியலில் பல நெருக்கடிகளைத் தோற்றுவிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகலாம். நரசிம்மராவ் எதையும் ஆறப் போடுபவரே ஒழிய, மறந்து விடுபவரும் அல்ல. வஞ்சம் தீர்க்கும் குணம் அற்றவரும் அல்ல. அவரது ஒன்றரை வருட கால ஆட்சியில் அவர் நடந்து கொண்ட விதமே இதற்குச் சிறந்த சான்றாகும்,

அத்தோடு, தமிழகத்தில் இன்று பாரதீய ஜனதாக் கட்சிக்கும் - அ. தி, மு. க விற்கும் இடையில் வளர்ந்து வரும் உறவும், தமிழகத்தில் பாரதீய ஜனதாக் கட்சி ஒதுங்க ஜெயலலிதா கொடுத்துள்ள இடமும், இந்தியப் பிரதமர் நரசிம்மராவைப் பொறுத்து ஓர் உவப்பான விடயமுமல்ல.

இந்திய அரசியல் சாசனத்தைப் பொறுத்து மாநில அரசை மத்திய அரசு கலைப்பதற்குக் காரணமே தேவையில்லை. தான் விரும்பிய நேரத்தில் மத்திய அரசு கலைத்து விடலாம். இதற்கு மாநிலத்தில் உள்ள அரசாங்கத்திற்குப் பெரும்பான்மை பலம் உள்ளது. மக்களின் ஆதரவு உள்ளது போன்ற எந்த ஒன்றும் தடையாக இருந்ததில்லை, இந்நிலையில் எதிர்க்கட்சியினால் பலமாக ஊழல் குறறச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள ஜெயலலிதாவின் அரசை டிஸ்மிஸ் செய்வது மத்திய அரசைப் பொறுத்து பெரிய சிக்கலான விடயம் ஒன்றல்ல, இதற்கான அத்திவாரத்தை சுப்பிரமணியம் சுவாமி ஏற்கனவே இடத் தொடங்கி விட்டார் தி. மு. கவும் அதற்குப் போதிய ஆதரவு வழங்கும்.

இந்நிலையில் ஜெயலலிதாவின் மாநில அரசாங்கம் மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என்று கூறுவதில் தவறேதும் இல்லை. ஆனால் மாநிலத்திலுள்ள பெரும்பான்மை பலம் கொண்ட மாநில அரசை மத்திய அரசு கலைக்க முற்படுகையில் அதற்காகக் குரல் கொடுத்து, அதனை குற்றச்சாட்டாக முன்வைக்கக் கூடிய தார்மீக பலம் ஜெயலலிதாவிற்கும் இல்லை. ஏனெனில் அதே வழியைக் கொண்டே அவரும் பதவிக்கு வந்தவர் என்பதை மக்கள் மறந்து விட அதுவொன்றும் நீண்ட காலத்தின் முன் நடந்து முடிந்த ஒரு விடயமல்ல.

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டு துணைவி அ. மி. த.க. பாடசாலையில் இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார் என தெரியவருகின்றது. (நி)

(குருநகர்)

யாழ். சென். றோக் றோ. க. வித்தியாலய உடற்பயிற்சிப் போட்டிகள் நேற்றுமுன்தினம் பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. ஜே. யேசுதாஸன் தலைமையில் றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. (21)

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக அணிக்கும் மானிப்பாய் பரிஷ் அணிக்குமிடையில் நடைபெற்ற 50 ஓவர் சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டியில் பல்கலைக்கழக அணி 131 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய பல்கலைக்கழக அணி 50 ஓவர்களில் 5விக்கெட் இழப்பிற்கு 303 ஓட்டங்களைப் பெற்றது.

மானிப்பாய் பரிஷ் 46 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. (42)

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணிக்கும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்குமிடையில் நடைபெற்ற 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை 116 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. (42)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் பாக்ஸ் இல்லம் (நீலம்) முதலாம் இடத்தைப்பெற்றது. மேக்கற்றொயிட் இல்லம் (சிவப்பு இல்லம்) இரண்டாம் இடத்தைப் பெற்றது. இவ்விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி லீலா சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது. (25)

என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குறைவாக இருக்கும் வேளையில் பல்கலைக்கழக அனுமதி

கழக அனுமதியில் வழங்கப்பட்டன.

# மத்தியில் காங்கிரஸ் ஆதரவு அ.இ.அ.தி.மு.க. மீளப்பெறும்

## காங்கிரசுடன் உறவு முறிந்தது

## சென்னையில் ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் கட்சிக்கும், தமது கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு முறிந்து விட்டதாக தமிழக முதலவரும் அ. இ. அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினமிரவு அறிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில்; காங்கிரஸ் கட்சியே இந்த உறவை முறித்துக் கொள்ள விரும்புவதாக அனுமானித்தே அ. இ. அ. தி. மு. க. இந்த முடிவை மேற்கொள்வதாகவும், எனவே எதிர்வரும் பழனி லோக்சபாத் தொகுதி இடைத் தேர்தலின் போதும், ராணிப்பேட்டை சட்டமன்றத்தொகுதி இடைத் தேர்தலின் போதும் அ இ. அ. தி. மு. க. தனித்துப் போட்டியிடும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மத்தியிலுள்ள காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக்கு அ. இ. அ. தி. மு. க. வழங்கி வந்த ஆதரவை மீளப்பெறப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்திலுள்ள காங்கிரஸ் பிரமுகர்களும், தலைவர்களும் அ. இ. அ. தி. மு. க. அரசின் மீது பல்வேறு ஊழல் குற்றச் சாட்டுக்களை சுமத்திவரும் வேளையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மௌனமாக இருப்பதால், கூட்டணி உறவை காங்கிரஸ் தலைமை விரும்பவில்லை என்று அனுமானிக்க முடிகிறதுஎன்றும் அந்த அடிப்படையில் கூட்டணி உறவு முறிவடைவதாகவும் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

அ. இ. அ.தி.மு. கவினரால் புரியப்பட்டிருக்கும் ஊழல்கள் பற்றிய பட்டியல் தயாரிக்கப் பட்டு வருவதாகவும், இப்பட்டியல் மக்களுக்குவிளக்கப்படும் என்றும் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மத்திய தொழில் துறை இணை அமைச்சர் எம். அருணாசலம் நாடாளுமன்றத்தில் அ. இ. அ. தி. மு. க. வினர் வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ள முடியுமா என்று சவால் விட்டுப் பேசியுள்ளார்.

இதேபோல தமிழக மாநில காங்கிரஸ் தலைவர்கள் பலரும் நேசக் கட்சியான அ.இ. அ. தி. மு. க. பற்றி இழித்தும், பழித்தும் பேசி வருகிறார்கள் என்றும் தெரிவித்த ஜெயலலிதா இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் காங்கிரஸ் தலைவர் என்ற ரீதியில் பிரதமர் நரசிம்மராவ் மௌனத்தையே கடைப்பிடித்துள்ளார் என்றும் குற்றம் சுமத்தியுள்ளார்.

### அ.தி மு.க.வை இனிமேல்

## கடவுள் வந்தாலும் கூட காப்பாற்ற முடியாது

### காங்கிரஸ் செயலாளர்கள் கூட்டறிக்கை

அ. இ. அ. தி.மு கவை முதல்வர் ஜெயலலிதா அழிவுப் பாதையில் தான் இட்டுச் செல்கின்றார். இனிக் கடவுளே வந்தாலும் அதனை காப்பாற்ற முடியாது என காங்கிரஸ் கட்சியின் இணைச் செயலாளர்கள் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: மூச்சுக்கு மூன்று முறை பெரியார் அண்ணா என்று பேசி திராவிட பாரம்பரியத்தின் உண்மை வாரிசுகள் தாமே என்றுகூறும் நாவலர் நெடுஞ்செழியன், மதவாத சக்தியான பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டுசேரலாம் என்கிறார். கரசேவையை ஆதரித்து ஜெயலலிதா பேசியதும், மசூதியை இடிப்பதற்கு பாரதீய ஜனதாதான் காரணம் என்பதும் உலகறிந்த உண்மை.

பாரதீய ஜனதாவுடன் கூட்டு சேருவோம் என்பதைக் காட்டி அ. தி. மு. க. காங்கிரசை மிரட்டப் பார்க்கிறது. இந்த மிரட்டலுக்கு காங்கிரஸ் அஞ்சாது என்றும் கூறப்பட்டுள்ளது.

### மத்திய அரசு விதித்த தடை

## அமுலாக்கப்படுவது பற்றி அறிக்கை தர பணிப்பு

(டில்லி)

வகுப்பு வாத இயக்கங்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருக்கும் தடை உத்தரவு சரியான விதத்தில் அமுல்படுத்தப்படுகின்றதா என்பது பற்றி பல்வேறு மாநிலங்களிலும் உள்ள தலைமைச் செயலாளர்களிடமிருந்து மத்திய உள்துறை அமைச்சகம் அறிக்கை கோரியிருக்கிறது. சில மாநிலங்களில் இந்தத் தடை உத்தரவுகள் சரிவர அமுல்படுத்தப்படவில்லை என்று வெளிவந்துள்ள தகவல்களை மத்திய அரசு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை சேலம் நகரில் இந்து முன்னணி மாநாடு நடத்தியதும், 25 ஆம் திகதியன்று சென்னையில் பேரணி நடத்த பாரதீய ஜனதா திட்டமிட்டு இருப்பதும் தெரிந்ததே.

## எதிர்பார்க்கப்பட்ட ஒன்று

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் கட்சிக்கும் அ. இ. அ. தி. மு. கவுக்கும் இடையிலான கூட்டணி உறவு முறிந்து போனதாக ஜெயலலிதா அறிவித்துள்ளமை பற்றிக் கருத்து வெளியிட்டுள்ள தி. மு. க தலைவர் மு. கருணாநிதி, இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான் என்று இரத்தினச் சுருக்கமாகப் பதில் அளித்துள்ளார்.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் ஐந்து அங்கத்தவர்களுக்கு மேல் உள்ள 'அ' 'உ' அட்டைகளுக்கு 5 கிலோ அரிசியும், 2கிலோ மாவும் வழங்கப்படுகிறது.

ஐந்து அங்கத்தவர்களுக்குகீழ் உள்ள மேற்படி அட்டைகளுக்கு 5 கிலோ அரிசியும், 2 கிலோ மாவும் வழங்கப்படுகிறது. அத்துடன் 10, 11ஆம் கட்ட உணவு முத்திரைகளுக்கும் மாவும், அரிசியும் வழங்கப் படுகிறது.

### கண்டெடுப்பு

குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

### இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்துக்குப் பொறுப்பாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கவிஞர் திரு. த. துரைசிங்கம் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் யாழ். கல்விக் கோட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவரென்பது குறிப்பிடத்தக்கது. [நி]

### 'உ' அட்டைக்கு உணவுப்பொருள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தனது பகுதியை சேர்ந்த 'உ' உலர் உணவு அட்டை வைத்திருப்பவர்களின் மீளாய்வு செய்யப்பட்ட அட்டைக்கு பங்கீட்டு அடிப்படையில் உணவுப் பொருள்களை வழங்கிவருகின்றது.

### கல்வி அபிவிருத்தி மன்றம் அங்குரார்ப்பணம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் கல்விச் சீர்கேட்டினை நிவர்த்தி செய்யும்முகமாக கிளிநொச்சி, பரந்தன், உருத்திரபுரம் ஆகிய கொத்தணிகளை இணைத்து கல்வி அபிவிருத்தி மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கிளிநொச்சிக் கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இலக்கியன் கலந்து கொண்டார். இம்மாவட்டத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் இங்கு கேட்டுக்கொள்ளப்பட்டது. [16]

நல்லூர் ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்



ஈழநாதம்

# அ.தி.மு.கவின் அறிவிப்பு; எமக்குக் கவலையில்லை

## வாழப்பாடி தெரிவிப்பு

அ. தி. மு. கவின் ஒருதலை பட்சமான அறிவிப்பு குறித்து தனது கட்சி ஆச்சரியமோ, கவலையோ படவில்லை என்று தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. க - இந்திராகாங்கிரஸ் கூட்டணி முறிவடைந்து விட்டதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் அறிவித்ததையடுத்து இராமமூர்த்தி நேற்று சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பினால் ஜெயலலிதா மத சார்பற்றவர் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது. வகுப்புவாத பாரதீய ஜனதாவுடன் ஜெயலலிதா இணைவது தேசிய ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜெயலலிதா எதேச்சையதிகாரத்துடனும் தன்னையே பிரதானமானவராக கருதியும் செயற்படுகின்றார் என்பதையே இது நிரூபித்துள்ளது என்றும் வாழப்பாடி இராமமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

ராஜீவ் காந்தி தமிழ் மண்ணில் இரத்தம் சிந்தி வரலாறு காணாத வெற்றியை காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டணிக்கு பெற்றுக் கொடுத்தார் ஆனால்ஜெயலலிதா கூட்டணி முடிவு குறித்த தனது அறிவிப்பின் மூலம் ராஜீவ் காந்தியை மட்டுமல்ல தன்கட்சி தொண்டர்களுக்கும் தமது தலைவர் எம். ஜி. ஆருக்கும் துரோகம் இழைத்து விட்டார் என்றும் வாழப்பாடி இராமமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அ. தி. மு க -காங்கிரஸ் கூட்டணி முறிவை அடுத்து நிலைமையை நேரில் தெரிவிப்பதற்காக வாழப்பாடி இராமமூர்த்தி புதுடில்லிக்கு நேற்று காலை விரைந்தார்.

பிரதமர் நரசிம்மராவின் அவசர அழைப்பை ஏற்று அவர் புதுடில்லி சென்றதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.


## இனிக்கும் இதய கானங்கள்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்கள் ஒன்றிணைந்து நடாத்தும் நீகன் நகர் கப்டன் ஜிம்கலி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக

தமிழோசை புகழ்
அருணா இசைக் குழுவினர் வழங்கும்

இனிக்கும்
# இதயகானங்கள்
(இசை நிகழ்ச்சி)

இடம்: வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அரங்கு
காலம்: 14-03-1993 (ஞாயிறு)
காட்சிகள்: பி. ப. 2-30 மாலை 6-00 மணி

உங்கள் ஆதரவை நாடுகின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:-

ராசி சில்க்ஸ்
இல. 70, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். (சி-6174)


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## மெய்வல்லுநர் போட்டி

(குருநகர்)

யாழ். கொழும்புத்துறை–புனித ஜோசப் வித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. பி. பெனடிக்ற் தலைமையில் நடைபெறும்.

யாழ்.கோட்டப் பிரதிக் கல்...

## பண்ணிசைப் போட்டி

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டி யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்ப பிரிவில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இதில் கோட்ட மட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றோர் பங்குபற்றுவர். வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வட மாநில கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பிற்பகல் 2.00 மணிக்கு வழங்குவார்.

## கருணாநிதி சந்திப்பு

சென்னை வந்துள்ள ஜனதாதள தலைவர் வி. பி. சிங் நேற்று தி. மு. க தலைவர் மு. கருணாநிதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கருணாநிதியின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு ஒரு மணி நேரத்திற்கு மேல் நீடித்ததாகவும், தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து பேச்சுகளின் போது ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கூட்டணி முறிவுகுறித்து காங்கிரஸ் ஆராய்வு

கூட்டணி முறிவால் எழுந்துள்ள நிலைமைகள் குறித்து விவாதிப்பதற்கு இந்திரா காங்கிரஸ் கட்சி தலைவர் பி. வி. நரசிம்மராவ் தமிழ்நாடு,பாண்டிச்சேரி காங்கிரஸ் எம். பிகளை அழைத்து நேற்று இரவு புதுடில்லியில் அவசர கூட்டம் ஒன்றை கூட்டினார்.

## பேரணி நடத்த அனுமதி எந்த கட்சியும் கோரவில்லை

எதிர்வரும் 21-ம் திகதி சென்னையில் பேரணி நடத்த அனுமதிகோரி இதுவரை எந்த கோரிக்கையும் தமிழக அரசிற்கு வரவில்லை என அ. தி. மு. க. பாராளுமன்ற கட்சித் தலைவர் ஜி. சுவாமிநாதன் நேற்று மக்களவையில் தெரிவித்தார்.

அன்றைய தினம் பாரதீய ஜனதா கட்சி நடாத்த திட்டமிட்டுள்ள பேரணியை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என மக்களவையில் சுப்பிரமணியம்சுவாமிகோரிக்கை எழுப்பியபோதே சுவாமிநாதன் இவ்வாறு பதிலளித்தார்.

## புதுச்சேரி காங்கிரஸ் அரசு சிறுபான்மைஅரசாகிவிட்டது

### அ. இ. அ. தி. மு. க. கருத்து

காங்கிரசுடனான கூட்டை அ.தி.மு.க. முறித்துக் கொண்டதையடுத்து புதுச்சேரி சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சி தனது பெரும்பான்மை பலத்தை நிரூபித்துக் காட்டுமாறு புதுச்சேரி சட்டப்பேரவையின் எதிர்கட்சியான அ. தி.மு.க. சவால் விட்டுள்ளது.

நேற்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடையே பேசிய புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர், அ. தி. மு. க. தனது ஆதரவை விலக்கிக் கொண்டதால் புதுச்சேரி அரசு சிறுபான்மை அரசாகி விட்டது என்றார்.

இதேசமயம் புதுச்சேரி அரசுக்கு பெரும்பான்மை ஆதரவு உண்டு. ஆபத்து ஏதுமில்லை என புதுச்சேரி முதலமைச்சர் வைத்தியலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

30 உறுப்பினர்களைக் கொண்ட புதுச்சேரி சட்டப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் 15 பேர் உள்ளனர். சுயேட்சை உறுப்பினர்கள் இருவரும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

## உறவிற்கான காலம் வந்துவிட்டது

[சென்னை]

அ. தி. மு. கவிற்கும் காங்கிரசிற்கும் இடையிலான உறவு முறிந்தமை அ.தி.மு.க.

பாரதீய ஜனதாவின் பேரணியை

## தடுத்து நிறுத்துமாறு மத்திய அரசு கோரும்

(சென்னை)

சென்னையில் எதிர்வரும் 21 ஆம்திகதி நடைபெறவுள்ள பாரதீய ஜனதாக்கட்சியின் பேரணியை தடைசெய்யும்படி மத்திய அரசு தமிழக அரசை கோரும்என உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று மாநிலங்களவையில் குறிப்பிட்டார்.

எனினும் பேரணியை தடைசெய்வது குறித்து தமிழக அரசே இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் சவான் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சியின்

## சட்டப் பேரவை உறுப்பினர் இன்று அவசரக் கூட்டம்

தற்போதைய தமிழக அரசியல் நிலைமை குறித்து ஆராயவென காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவைகுழு இன்று சென்னையில் கூடுகின்றது.

1991இல் அ.தி.மு.க. காங்கிரசின் ஆதரவுடன் பதவிக்கு வந்தமையினால்முதலமைச்சர் ஜெயலலிதா இப்போதைய நிலையில் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கை உட்பட இவ்விவகாரம் தொடர்பான மேலும் பல விடயங்களை ஆராய காங்கிரஸ் சட்ட பேரவைக்குழு கூடுவதாக காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## வாழப்பாடி அறிவிப்பே முறிவுக்குக் காரணம்

அ.தி.மு.க அரசின் ஊழல்களை இன்னும் இருமாதங்களில் மக்களுக்கு வெளிப்படுத்தப் போவதாக வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தமையே முதலமைச்சர் ஜெயலலிதா கூட்டணி முறிவை அறிவிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கலாம் என பி.பி.ஸி தெரிவித்தது

அதேவேளைகூட்டணிஉறவு முறிவை தடுக்கபி.வி. நரசிம்மராவ் எந்த முயற்சியையும் எடுக்காமை முதலமைச்சரான ஜெயலலிதாவின் சுயகௌரவத்தை பாதித்தமையும் ஜெயலலிதாவின் இந்த அறிவிப்புக்கு காரணமாக இருக்கலாம் என அதில்மேலும் தெரிவிக்கப்பட்டது.

மதவாதக் கட்சியான பி. ஜே. பியுடன் அ.தி.மு.க கூட்டுச்சேர இந்தகூட்டணி முறிவு அறிவிப்பு வழிவகுத்தாலும் ஜெயலலிதாவின் அ. தி.மு. க. வைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் பி. ஜே. பி. யுடனான கூட்டை விரும்பவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அரசாங்க அறிவித்தல்

## சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்

### துணை வைத்தியசேவை மற்றும் நடுத்தர தொழில்நுட்பவியலாளர் சேவைகளுக்கான பயிலுநர்கள் தெரிவு — யாழ்ப்பாண மாவட்டம்

1989-ம் ஆண்டு நடாத்தப்பட்ட விசேட பரீட்சை மற்றும் 1992-ம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சைகளில் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்படி சேவைகளுக்கான பயிலுநர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சையொன்று கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகளுக்கு 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் திகதி, வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் நடாத்தப்படும்.

### 1989 விசேட பரீட்சை

| பெயர் | விலாசம் |
|---|---|
| 01. செல்வி ஆர் சிறீரஞ்சனி | நாவற்குழி, கைதடி |
| 02. செல்வி எஸ். சிவசக்தி | கேரதீவு றோட், நாவற்குழி - கைதடி |
| 03. திரு. [illegible] | கைதடி கிழக்கு, கைதடி |

காலம்: 14-03-1993 (ஞாயிறு)
காட்சிகள்: பி. ப. 2-30 மாலை 6-00 மணி

உங்கள் ஆதரவை நாடுகின்றோம்.


விளம்பர அன்பளிப்பு:-

**ராசி சில்க்ஸ்**

இல. 70, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். (சி-6174)


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## ★ கருணாகரன் விஜய் ★

கொக்குவில் மேற்கு காந்திஜி வீதியைச் சேர்ந்த கருணாகரன் ஜெலின் தவமலர் தம்பதிகளின் செல்வப் பதல்வன் விஜய் தனது முதலாவது பிறந்தநாளை இன்று [11-03-1993] வியாழக்கிழமை அவரது இல்லத்தில் குதுகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா மற்றும் அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார், அத்தைமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார் மற்றும் பாட்டிமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னை ஆதிபராசக்தி அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கஎன வாழ்த்துகின்றார்கள்.

'அன்னை இல்லம்'
இ. கருணாகரன் ஜெலின்
காந்திஜி வீதி,
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

(சி-6175)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


-காங்கிரஸ் கூட்டணி முறிவை அடுத்து நிலைமையை நேரில் தெரிவிப்பதற்காக வாழப்பாடி இராமமூர்த்தி புதுடில்லிக்கு நேற்று காலை விரைந்தார்.

பிரதமர் நரசிம்மராவின் அவசர அழைப்பை ஏற்று அவர் புதுடில்லி சென்றதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### மெய்வல்லுநர் போட்டி

(குருநகர்)

யாழ். கொழும்புத்துறை-புனித ஜோசப் வித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. பி. பெனடிக்ற் தலைமையில் நடைபெறும்.

யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக அருட் திரு செபமாலை துரம் (பாசையூர்ப் பங்குத் தந்தை) யாழ். தெற்குக் கொத்தணி அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை ஆகியோர் கலந்து கொள்வர். (21)

### புதிய

குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திவரும் என அதிகார பூர்வ இராணுவ வட்டாரங் தெரிவித்துள்ளன.

கிழக்கில் படையினர் தமது நிலைகளை பலப்படுத்தாத வரையில் வடக்கில் பெரிய தாக்குதல் எதையும் நடாத்த முடியாது. இதனாலேயே கிழக்கில் முழுக்கவனம் செலுத்துகின்றோம் என மூத்த இராணுவ ஜெனரல் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்டில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ன, வைஸ்அட்மிரல் மோகான் ஜெயமஹா மற்றும் இரு முன்னிலை இராணுவ கேணல்கள் கொல்லப்பட்டதையடுத்து கூட்டு இராணுவ நடவடிக்கை எதையும் சிறிலங்கா பாதுகாப்புப்படைகள் மேற்கொள்ளவில்லை என ராணுவ விமரிசகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தி.மு.க. சவால் விட்டுள்ளது.

நேற்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடையே பேசிய புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர், அ. தி. மு. க. தனது ஆதரவை விலக்கிக் கொண்டதால் புதுச்சேரி அரசு சிறுபான்மை அரசாகி விட்டது என்றார்.

இதேசமயம் புதுச்சேரி அரசுக்கு பெரும்பான்மை ஆதரவு உண்டு. ஆபத்து ஏதுமில்லை என புதுச்சேரி முதலமைச்சர் வைத்தியலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

30 உறுப்பினர்களைக் கொண்ட புதுச்சேரி சட்டப்

### உறவிற்கான காலம் வந்துவிட்டது

[சென்னை]

அ. தி. மு. கவிற்கும் காங்கிரசிற்கும் இடையிலான உறவு முறிந்தமை அ.தி.மு.க. வுடனான பாரதீய ஜனதா கட்சியின் உறவை உருவாக்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக பி. ஜே பி. தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### குண்டு

நிர்வாக பொறுப்பாளர் கோ. கணேஷ், சாமிநாதன், பாலசிங்கம், குணாதி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### சமஷ்டி

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ தலைமையில் இயங்கும் ஐந்து எதிர்க் கட்சிகளின் கூட்டணி கூடி ஆலோசனை கலந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### சிறிலங்கா

வாழும் இலங்கைத் தமிழர்களின் அழுத்தத்தினால் இந்த இரு நாட்டுப் பிரதிநிதிகளும் சிறி லங்கா அரசுக்கு எதிராக மகாநாட்டில் நடந்து கொண்டதாக சிறிலங்கா அரசு சார்பு அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### சுகாதார

துவர் 10, பரிசாரகர் 63 பேரது பதவிகளும் வெற்றிடமாக உள்ளது என்று தெரியவருகின்றது [நி]


## கண்ணீர் அஞ்சலி

திரு. வேலுப்பிள்ளை

பலாலி ஆசிரிய கலாசாலை விஞ்ஞானநெறி 2 ஆம் வருடத்தைச் சேர்ந்த ஆசிரியை திருமதி உமாநிதி புகனராஜாவின் தந்தையார் திரு. வேலுப்பிள்ளை அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீரஞ்சலியை தெரிவிப்பதுடன் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

விஞ்ஞான மன்றம்
பலாலி ஆசிரிய கலாசாலை
திருநெல்வேலி

[4446]


# அரசாங்க அறிவித்தல்

## சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்

### துணை வைத்தியசேவை மற்றும் நடுத்தர தொழில்நுட்பவியலாளர் சேவைகளுக்கான பயிலுநர்கள் தெரிவு — யாழ்ப்பாண மாவட்டம்

1989-ம் ஆண்டு நடாத்தப்பட்ட விசேட பரீட்சை மற்றும் 1992-ம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சைகளில் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்படி சேவைகளுக்கான பயிலுநர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சையொன்று கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகளுக்கு 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் திகதி, வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் நடாத்தப்படும்.

### 1989 விசேட பரீட்சை

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01. | செல்வி ஆர் சிறீரஞ்சனி | நாவற்குழி, கைதடி |
| 02. | செல்வி எஸ். சிவசக்தி | கேரதீவு றோட், நாவற்குழி - கைதடி |
| 03. | திரு. ஏ. லோகநாதன் | கைதடி கிழக்கு, கைதடி |
| 04. | திரு. பீ. பாலசுப்பிரமணியம் | பழைய வீதி கோப்பாய் தெற்கு, கோப்பாய் |
| 05. | செல்வி எஸ். யோகராணி | ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்மேற்கு, கொக்குவில் |
| 06. | செல்வி பி. மஞ்சுளா | 20/1, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ். |
| 07. | செல்வி வானதி கிருஷ்ணன் | கனகம்புளியடி, சாவகச்சேரி |
| 08. | செல்வி ரி. வாகினி | மே/பா, வி. அழகரத்தினம், முருகன் வீதி, உரும்பராய் |
| ★ 09. | செல்வி எம். வரைமகள் | 'துளசி', வேலணை மேற்கு, வேலணை |
| 10. | செல்வி கே. தர்மேஸ்வரி | 'சிவபவனம்', தெணியம்மன் வீதி, பருத்தித்துறை |
| 11. | திரு. என். கோகுலரஞ்சன் | 93 ஏ, கண்டி வீதி, யாழ்ப்பாணம் |
| 12. | திரு. வி. எஸ். பத்மநாதன் | சாவகச்சேரி வடக்கு, மீசாலை |
| 13. | திரு. என். மகேந்திரன் | சாரதாஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி |

### 1992 போட்டிப் பரீட்சை

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01. | திரு. ஜி சிறீகாந்தன் | 126/7, அரசடி வீதி, யாழ்ப்பாணம் |
| 02. | திரு. வி. ஜெயராஜா | 'மாசுவன்', நீர்வேலி வடக்கு, நீர்வேலி |
| 03. | திரு. ரி. புவனேந்திரன் | 'கௌரி வாசம்', பாடசாலை ஒழுங்கை. இணுவில் மேற்கு, சுன்னாகம் |
| 04. | திரு. வி. குகனேசன் | வட்டு. கிழக்கு, கலைநகர், சித்தன்கேணி |
| ★ 05. | திரு. எஸ். தேவகுமாரன் | கம்பனை, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை |
| 06. | திரு. வி. சுந்தரராஜன் | மே/பா, பி. வல்லிபுரம், இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, யாழ்ப்பாணம் |
| 07. | திரு. எஸ். இராஜதுரை | சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை |
| 08. | செல்வி எஸ். சற்குணதேவி | 105, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் |
| 09. | திரு எஸ். அருட்செல்வன் | இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி |
| ★ 10. | திரு. வி. சுரேஷ் | 78, கல்லூரி வீதி, காங்கேசன்துறை |
| ★ 11. | திரு. எஸ். சீவராஜா | கிருஷ்ணன் கோவில் வீதி, மூளாய், சுழிபுரம் |
| 12. | செல்வி எஸ் அனுராதா | 2 ஏ, மருதடி வீதி, யாழ்ப்பாணம் |
| 13. | செல்வி கே. அனுராதா | தவசிக்குளம், மிருசுவில் |
| 14. | திரு. எஸ். திருமாறன் | அராலி தெற்கு, வட்டுக்கோட்டை |
| 15. | செல்வி எஸ். எழிலரசி | கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவில் |
| 16. | செல்வி எஸ். நாகராணி | 37, 2-ம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ். |
| 17. | செல்வி பி. மோகனாம்பாள் | 104/6, அத்தியடி, யாழ்ப்பாணம் |
| 18. | செல்வி பி. வசந்தநாயகி | 6, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம் |
| ★ 19. | திரு. எஸ். சிவமோகன் | சேர்ச் ஒழுங்கை. மூளாய், சுழிபுரம். |

2. நேர்முகப் பரீட்சைக்காக மேற்குறித்த சகல பரீட்சார்த்திகளுக்கும் தனித்தனியே கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் ★. அடையாளமிட்டவர்களின் கடிதங்கள் இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் வேலை நாள் ஒன்றில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.15 வரை நேரில் வந்து தமது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. நேர்முகப் பரீட்சைக்கான கடிதத்தின் 2-ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் ஒவ்வொன்றினதும் ஒளிப்படப் பிரதியொன்றினையும் கொண்டுவருமாறு சகல பரீட்சார்த்திகளும் கேட்கப்படுகின்றனர்.

நன்றி.

பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்,
10.03.93,

(சி-6171)